பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

28 04 2025 **MONDAY** 6 45 **AM**

வணக்கம்-மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களில் இரண்டு கோடி வீடுகள் கட்டப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

2. தமிழக அமைச்சரவையிலிருந்து திரு.பொன்முடி, திரு. செந்தில்பாலாஜி ஆகியோர் விடுவிக்கப்பட்டுள்ளனர். திரு. மனோ தங்கராஜ் அமைச்சரவையில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

3. மத்தியில் காங்கிரஸ் - திமுக கூட்டணி ஆட்சியில் இருந்தபோது தான், தமிழகத்தில் ஹைட்ரோகார்பன் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

4. நெல்லை மாவட்டம், நாங்குநேரி அருகே நேரிட்ட சாலை விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்

5. ஆசிய யோகாசன சாம்பியன் போட்டியில் இந்தியா 83 தங்கப்பதக்கங்களை வென்றது.

**>>>>>>>><<<<<<<<**

பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களில் வரும் ஆண்டில் இரண்டு கோடி வீடுகள் கட்டப்படும் என்று மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம், **Raisen** பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளை பயனாளிகளுக்கு வழங்கி அவர் பேசினார்.

இத்திட்டத்தின் கீழ் ஏழை மக்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித்தரப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் மகளிரின் வருமானத்தை அதிகரிக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறிய திரு. சிவராஜ் சிங் சௌஹான், மத்தியப்பிரதேசத்தில் உள்ள போஜ்பூர்

சட்டப்பேரவை தொகுதியில் லட்சாதிபதி பெண்கள் திட்டத்தின்கீழ், ஆறாயிரம் பேர் பயனடைந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<

தமிழக அமைச்சரவையிலிருந்து திரு.பொன்முடி, திரு. செந்தில்பாலாஜி ஆகியோர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

முதலமைச்சரின் பரிந்துரையை ஏற்று, இவர்களது ராஜினாமாவை ஆளுநர் ஏற்றுக் கொண்டதாக ஆளுநர் மாளிகை செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. செந்தில்பாலாஜி இதுவரை வகித்து வந்த மின்துறை, போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சிவசங்கருக்கு கூடுதல் பொறுப்பாக வழங்கப்பட்டுள்ளது.

மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை, வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. முத்துசாமிக்கும், திரு. பொன்முடி வகித்து வந்த வனத்துறை, பால்வளத்துறை அமைச்சர் திரு. ராஜ கண்ணப்பனுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்மநாபபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. மனோ தங்கராஜ் அமைச்சரவையில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார். இன்று மாலை 6 மணியளவில் ஆளுநர் மாளிகையில் நடைபெறும் நிகழ்ச்சியில் ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார்.

>>>>>>>><<<<<<<<

அரசின் நலத்திட்ட உதவிகள் அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்றடையும் வகையில், திமுக அரசு அயராது பாடுபட்டு வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கோவையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் சுமார் 240 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கிய அவர், ஒன்பது கோடி ரூபாய் செலவில் செயற்கை புல்வெளி ஹாக்கி மைதானத்திற்கும் அடிக்கல் நாட்டினார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், மாநில அரசு மக்களின் தேவையை அறிந்து திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறினார்.

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த மகளிர் சுயஉதவி குழுவினருக்கு கடந்த நான்காண்டுகளில் சுமார் 300 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக் கடனுதவி வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் பணிக்குச் செல்லும் பெண்களில் தமிழகத்தைச் சேர்ந்த பெண்கள் 43 சதவீத அளவிற்கு உள்ளதாகவும் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<

சென்னையை அடுத்த முட்டுக்காடு பகுதியில் பன்னாட்டு மாநாட்டு அரங்கம் அமைக்கும் பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, அதிகாரிகளைஅறிவுறுத்தியுள்ளார்.

இப்பணிகளை நேற்று ஆய்வு செய்த அவர், இங்கு கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

525 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இந்த அரங்கத்தில் ஐயாயிரம் இருக்கைகள் கொண்ட மாநாட்டுக் கூடம், பத்தாயிரம் பேர் பார்வையிடும் வசதி கொண்ட கண்காட்சி அரங்கம், கூட்ட அரங்குகள், உணவு விடுதிகள் மற்றும் 10 ஆயிரம் வாகனங்களை நிறுத்தும் வசதிகள் அமைக்கப்படவுள்ளன.

>>>>>>>><<<<<<<<

மத்தியில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் இருந்தபோது தான், தமிழகத்தில் ஹைட்ரோகார்பன் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

திண்டுக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநில அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் பலன் அனைவரையும் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

திமுக ஆட்சியை அகற்றுவதற்காகவே அஇஅதிமுகவுடன் பிஜேபி கூட்டணி அமைத்திருப்பதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<

நெல்லை மாவட்டம், நாங்குநேரி அருகே இரண்டு கார்கள் மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டரை வயது சிறுமி உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.

மதுரையிலிருந்து வள்ளியூர் நோக்கி வந்த கார், தளபதிசமுத்திரம் அருகே, சாலை தடுப்பில் மோதி, எதிர்த்திசையில் திங்கள்சந்தையிலிருந்து நெல்லை நோக்கி வந்த கார்மீது மோதியதில் சம்பவ இடத்திலேயே இரண்டு பேர் உயிரிழந்தனர்.

படுகாயமடைந்து வள்ளியூர் மற்றும் நாகர்கோவில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட ஐந்து பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

>>>>>>>><<<<<<<<

தமிழகம் மற்றும் காரைக்காலின் ஓரிரு இடங்களில் இன்றும் நாளையும் லேசான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 32 செகண்ட்ஸ்)

>>>>>>>><<<<<<<<

இருவரிச் செய்திகள்

ஈரான் நாட்டின், **Shahid Rajaee** துறைமுகத்தில் 28 பேர் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து இன்று ஒருநாள் தேசிய அளவிலான துக்கம் கடைபிடிக்கப்படும் என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

>>>>>>>><<<<<<<<

கனடாவின் **Vancouver** நகரில் நடைபெற்ற ஃபிலிப்பினோ திருவிழாவின்போது நடத்தப்பட்ட தாக்குதலில் 9 பேர் உயிரிழந்தனர்.

>>>>>>>><<<<<<<<

பஹல்காம் தீவிரவாத தாக்குதலை கண்டித்து, காங்டாக்கில் நடைபெற்ற பேரணியில் சிக்கிம் முதலமைச்சர் திரு. பிரேம்சிங் தமாங் உள்ளிட்ட ஏராளமானோர் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தினர்.

>>>>>>>><<<<<<<<

மும்பை மாநகராட்சிப் பகுதியின் அனைத்து மண்டலங்களிலும் பள்ளி மாணவர்களுக்கான விடுமுறை கால நூலகம் திறக்கப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<

தமிழக அரசின் விளையாட்டு விடுதியில் சேர விருப்பமுள்ள காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 7, 8, 9 மற்றும் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவிகள், அடுத்த மாதம் 5ஆம் தேதிக்குள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்குமாறு ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>>>><<<<<<<<

கரூர் மாவட்டம், தான்தோன்றிமலை பகுதியில் கேரளாவுக்கு கடத்த முயன்ற சுமார் ஆறரை டன் ரேஷன் அரிசி காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டது. இதுதொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

>>>>>>>><<<<<<<<

தூத்துக்குடி மாவட்டம், மூப்பன்பட்டியில் 24 கிலோ போதைப் பொருளை பறிமுதல் செய்த காவல்துறையினர் 9 பேரை கைது செய்தனர்.

>>>>>>>><<<<<<<<

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி மாரியம்மன் கோவில் திருவிழாவை ஒட்டி, மலையாள மக்கள் கேரள பாரம்பரிய ரதங்களுடன் வந்து வழிபட்டனர்.

>>>>>>>><<<<<<<<

சித்திரை அமாவாசையை முன்னிட்டு, ஈரோடு மாவட்டம், பன்னாரி மாரியம்மன் கோவிலில் நேற்று ஏராளமான பக்தர்கள் சிறப்பு வழிபாடு செய்தனர்.

>>>>>>>><<<<<<<<

சென்னை மாவட்ட அளவிலான மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர் கூட்டம், நாளை மறுநாள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

>>>>>>>><<<<<<<<

புதுதில்லியில் நடைபெற்ற ஆசிய யோகாசன சாம்பியன் போட்டியில் இந்தியா 83 தங்கப்பதக்கங்களை வென்றது.

21 நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்ற இப்போட்டியில், 83 தங்கம், 3 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்று இந்தியா பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்தது.

மூன்று தங்கம், 3 வெள்ளி, 4 வெண்கலம் வென்று ஜப்பான் இரண்டாம் இடத்தையும், ஒரு தங்கம், 11 வெள்ளி, 6 வெண்கலப்பதக்கம் வென்று மங்கோலியா 3ஆம் இடத்தையும் பிடித்தன.

>>>>>>>><<<<<<<<

மான்செஸ்டரில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Krittwik Roy- Sayali Wani** இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 5-11, 8-11, 13-11, 10-12 என்ற செட்கணக்கில் எகிப்தின் **Dina Meshref -** சிங்கப்பூரின் **Zeng Jian** இணையிடம் தோல்வியடைந்தது.

>>>>>>>><<<<<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

தில்லியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் டாஸ் வென்ற பெங்களூரு அணி பந்து வீச தீர்மானித்ததை அடுத்து, முதலில் பேட் செய்த தில்லி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 162 ரன் எடுத்தது.

163 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பெங்களூரு அணி 18 புள்ளி 3 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 165 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

ராஜஸ்தானில் இன்றிரவு மணி 7.30-க்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் குஜராத் - ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

>>>>>>>><<<<<<<<

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்திய வீரர்கள் 7 பேர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

ஜோர்டனின் அம்மானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பிரிவில் **Jannet, Simranjeet Kaur, Harsika, Anshika, Kushi Chand, Ahanna Sharma** ஆகியோரும், ஆடவர் பிரிவில் **Devansh-**ம் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளனர்.

>>>>>>>><<<<<<<<

கஜகஸ்தானில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Paritosh Pawar** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

முதல்சுற்று ஆட்டத்தில் அவர், 6-7, 6-1, 11-9 என்ற செட்கணக்கில் கஜகஸ்தானின் **Daniel**–ஐ வென்றார்.

மற்றொரு ஆடவர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் **Prasad Ingale**-ம் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>>>>>END<<<<<<<<**